கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் தோழமை கிறிஸ்துமஸ் விழா நடைப்பெற்றது.கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் டிசம்பர் 20 தேதி வைத்து கன்னியாகுமரி சமூக சேவை சங்க, சுய உதவிக்குழுக்கள் சார்பில் தோழமை கிறிஸ்துமஸ் பெருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் தலைமையில் நடந்தது. சிறப்பு விருந்தினராக வெள்ளிமலை விவேகானந்த ஆசிரம சுவாமி நிஜானந்தஜி மற்றும் தக்கலை ஹலிமா ஆகியோர் வருகைப் புரிந்து இவ்விழாவில் பங்கேற்று மத சமத்துவ நல்லெண்ண உரை நிகழ்த்தினார்கள். பின்பு கிறிஸ்துமஸ் கேக் வெட்டி மத தலைவர்கள் பகிர்ந்துண்டனர். நிகழ்சியின் தொடக்கமாக மகளீர் சுய உதவிக்குழுக்களின் கலை போட்டிகள் நடைபெற்றது.இதனை KKSSS இயக்குநர் தந்தை. மகேஷ் ஆண்றனி அவர்கள் தலைமையுரையாற்றி தொடங்கி வைத்தார்.இதில் கிறிஸ்துமஸ் நடனம், பாடல் மற்றும் உணவுத்திருவிழா பேன்ற நிகழ்சிகள் நடைபெற்றது.இதில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், அனைத்து மத பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்ட இத்திருவிழா நிகழ்ச்சி வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது.இதில் சுமார் 650 மேற்ப்பட்ட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## ஸ்கூட்டி பயிற்சி

கிறிஸ்துராஜபுரம் பகுதியில் ஸ்கூட்டி பயிற்சி வகுப்பின் தொடக்க விழா டிசம்பர் 15 தேதி சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு அருட்தந்தை மகேஷ் ஆண்டனி அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் வாழ்த்துரை வழங்கி பயிற்சியாளர்களை ஊக்குவித்தார். ஸ்கூட்டி பயிற்சியாளர் சஜிதா அவர்கள் பயிற்சி வகுப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். பெண்களின் சுயநம்பிக்கையையும் சுயசார்பையும் வளர்க்கும் நோக்கில் இந்த பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. மொத்தம் 21 பயிற்சியாளர்கள்

கலந்து கொண்டனர். 25 நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சியில் சாலை விதிகள், பாதுகாப்பு முறைகள் மற்றும் நடைமுறை ஓட்டுதல் ஆகியவை கற்றுத்தரப்படுகின்றன. இந்த முயற்சி பெண்களின் வாழ்க்கையில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

## ஆரி (Aari) பயிற்சி

பெண்களின் வாழ்க்கையில் ஒரு திறன் புதிய நம்பிக்கையாக மாறும், அந்த நம்பிக்கையை உருவாக்கும் விதமாக, மாறப்பாடி மையத்தில் உள்ள சுய உதவி குழு (SHG) உறுப்பினர்களுக்காக நடத்தப்பட்ட 40 நாள் ஆரி திறன் வளர்ப்பு பயிற்சி, டிசம்பர் 12ஆம் தேதி வெற்றிகரமாக நிறைவடைந்தது. இந்தப் பயிற்சியில் 19 பெண்கள் கலந்து கொண்டு, தையல் துறையில் வருமானம் ஈட்டக் கூடிய ஆரி எம்பிராய்டரி கலையில் சிறப்பான திறன்களை பெற்றனர்.

இதன் நிறைவு விழாவானது டிசம்பர் 12ஆம் தேதி, புனித தோமஸ் சமூக நல கூடததில் வைத்து நடைபெற்றது. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குனர் அருட்தந்தை மகேஷ் ஆன்டணி, பங்குத் தந்தை மிஜோ, சுய உதவி குழு (SHG) ஒருங்கிணைப்பாளர் திரு. அஜின், பயிற்சியாளர் செல்வி. ரெஷ்மிதா மற்றும் சுய உதவி குழு (SHG) உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். தொடர்ந்து இயக்குனர் அருட்தந்தை மகேஷ் ஆன்டணி அவர்கள் தலைமையுரையாற்றினார், அதில் இந்த திறன் பயிற்சி பெண்களின் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்புமுனையாக அமையும் என்றும் ஊக்கமளித்தார். பின்னர் அருட்தந்தை மிஜோ அவர்கள் வாழ்த்துரை வழங்கி, பயிற்சியாளர்களின் உழைப்பையும் ஒற்றுமையையும் பாராட்டினார்.

இறுதியில் பயிற்சி பெற்ற சுய உதவி குழு (SHG) உறுப்பினர்கள் தாங்கள் செய்த அழகிய ஆரி வேலைப்பாடுகளை காட்சிப்படுத்தினர், அது அவர்களின் உழைப்பு, படைப்பாற்றல் மற்றும் தன்னம்பிக்கையின் சின்னமாக இருந்தது. இந்த முயற்சி பெண்களை சுயநிறைவு கொண்டவர்களாக மாற்றி, நிலையான வாழ்வாதாரத்திற்காக ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது.

## கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் – KKSSS பேக்கர்ஸ் தொடக்க விழா

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் புதிய முயற்சியாக KKSSS பேக்கர்ஸ் தொடக்க விழா 4 டிசம்பர் அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை தக்கலை மறைமாவட்டத்தின் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்படம் அவர்கள் ஜெபம் செய்து திறந்து வைத்தார். KKSSS இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆன்டனி அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று உரையாற்றினார். அவர் தனது உரையில், இந்த பேக்கரி முயற்சி புதிய வேலைவாய்ப்பை உருவாக்கி, சுயதொழில் வளர்ச்சிக்கு உதவும்

என தெரிவித்தார். தொடக்க விழாவில்; அருட்தந்தைகள், அருட்சகோதரிகள், KKSSS பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு வாழ்த்துகள் மற்றும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டன. அனைவரின் ஒத்துழைப்புடன் இந்த முயற்சி வெற்றிகரமாக வளர பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இந்த புதிய முயற்சி மூலம் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு KKSSS தொடர்ந்து பங்களிக்கும் வழிவகுக்கும்.

# நலவாழ்வு பணிக்குழு

## கிறிஸ்துமஸ் விழா

சார்பில் தக்கலை மறைமாவட்டத்தின் நலவாழ்வு பணிக்குழு கிறிஸ்துமஸ் விழா டிசம்பர் 17 அன்று கொண்டாடப்பட்டது. விழாவிற்கு தமிழ்நாடு நலவாழ்வு பணிக்குழு தலைவர் மற்றும் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். கிறிஸ்துமஸ் திருநாளின் உண்மை அர்த்தமான அன்பு, சேவை மற்றும் தியாகம் குறித்து அவர் தனது உரையில் வலியுறுத்தினார். விழாவில் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி அவர்கள் வாழ்த்துரை வழங்கி, நலவாழ்வுப் பணிகளில் தன்னார்வலர்களின் பங்களிப்பை பாராட்டினார். தொடர்ந்து கிறிஸ்துமஸ் கேக் வெட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 35 தன்னார்வலர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். நலவாழ்வு பணிக்குழு சேவைகளில் ஈடுபடும் அனைவருக்கும் ஊக்கமளிக்கும் வகையில் இந்த விழா அமைந்தது. அன்பு, ஒற்றுமை மற்றும் மனிதநேயத்தை வெளிப்படுத்தும் இந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் அனைவரின் மனதிலும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் விதைத்தது.

## வாறுதட்டு புனித சவேரியார் அலகு

கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு வாறுதட்டு புனித சவேரியார் ஆலயத்தில் செயல்பட்டு வரும் நலவாழ்வு பணிக்குழு சார்பாக 24 ஆம் தேதி காலை திருப்பலி முடிந்த பிறகு பங்குத்தந்தை தலைமையில், மதர் றீனா மேரி மற்றும் நலவாழ்வு இயக்கத்தின் உறுப்பினர்கள் சேர்ந்து ஏழைக் குடும்பங்களின் வீடுகளுக்கு சென்று அவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை பரிசாக வழங்கப்பட்டது.

## பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் அலகு

நலவாழ்வு பணிக்குழு மற்றும் பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் சார்பில் கிறிஸ்துமஸ் நாளில் 10 உணவு பொட்டலமும் புத்தாண்டில் ஜனவரி ஒன்றாம் தேதி 7 உணவு பொட்டலமும் சாலையோரம் வசிக்கும் ஏழைகளுக்கு வழங்கப்பட்டது. இந்த உணவு பொட்டலங்களை நலவாழ்வு இயக்கம் தயாரித்து வழங்கியது.

# அருட்சகோதரர்களிடமிருந்து

**"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்."(எரே 1:5)**

அருட்சகோதரர்கள் அனைவருக்கும் நலமாக உள்ளார்கள். கிறிஸ்துமஸ் விடுமுறைக்காக அனைவருக்கும் தங்களுடைய இல்லங்களுக்கு திரும்பினார்கள். அதன் பிறகு டிசம்பர் 21 - ம் தேதி அனைவருக்கும் மறைமாவட்டத்திற்கு திரும்பினார்கள். அவர்கள் அனைவரும் இளம் குருமடத்தில் நடைபெற்ற ஒரு நாள் தியானதில் கலந்துகொண்டனர். மேலும் அவர்கள் 22 - ம் தேதி நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்டு ஆயர் மற்றும் கூரியா உறுப்பினர்களோடு கலந்துரையடினார்கள். அதனை தொடர்ந்து அருட்சகோதரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட பங்குகளுக்கு சென்று அருட்தந்தையருக்கு உதவி புரிந்தனர். மேலும் ஒரு சில அருட்சகோதரர்கள் மறைமாவட்டத்தில் நடைபெற்ற மறைவட்ட மறைக்கல்வி போட்டிகளுக்கு உதவிப்புரிந்தார்கள்.

**இப்படிக்கு**
**அருட்சகோ திவின் ராஜ் D S & டெபின்**

## வரவிருக்கும் நிகழ்வுகள்

ஜனவரி 11 - SMCEY 2026 இன் பங்கு நிலை தொடக்க விழா

ஜனவரி 20 – அருட்தந்தையர்கள் கூடுகை

# மறைமாவட்டச் செய்திகள்

## மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா

2025 டிசம்பர் 05, 06, 07, (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்றது. முதல் இரண்டு நாட்களில் மாலையிலும், அதைத் தொடர்ந்து இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை முழு நாள் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. சென்னை பாப்புலர் தியான இல்லத்தை சார்ந்த அருட்தந்தை ரபேல் கூத்தூர், வி.சி., தனது குழுவினருடனும், மற்றும் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தையர்கள் வழிநடத்தினர். இறுதி நாளில் ஆயர் அவர்களால் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து, கிறிஸ்து ஜூபிலி ஆண்டு 2025 இன் நிறைவு விழா சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்றது. மறைக்கல்வி மாணவர்களுக்கான தியானம் அருட்தந்தை பிரிண்டோ மற்றும் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. குழந்தைகளுக்கான தியானத்தை அருட்தந்தை டோஜி வழிநடத்தினர். அருட்தந்தை வினு டி.ஜோசப் அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

## குழித்துறையில் மறைமாவட்ட சட்டப் பிரிவு அலுவலகம் அர்ச்சிப்பு

2025 டிசம்பர் 09 மறைமாவட்ட சட்டப் பிரிவு அலுவலகம் குழித்துறையில் அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டது. மறைமாவட்டத்தில் தேவைப்படுபவர்களுக்கு நம்பகமான மற்றும் அணுகக்கூடிய சட்ட உதவிகளை வழங்குவதே சட்டப் பிரிவின் முதன்மையான நோக்கமாகும். சட்டப் பிரிவு இயக்குநர் அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் மக்கள் நலனுக்கான இத்தகைய பயனுள்ள முயற்சிக்காக எடுக்கப்பட்டது.

## கிறிஸ்து ஜூபிலியின் நிறைவு விழா

கிறிஸ்து ஜூபிலி 2025 இன் மறைமாவட்ட அளவிலான நிறைவு விழா 2025 டிசம்பர் 07 கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா நிறைவுடன் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்து பங்குகளிலும் டிசம்பர் 28 யூபிலி நிறைவு விழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

# மறைவட்டச் செய்திகள்

## தக்கலை – பிலாங்காலை

### புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

பங்கு பாதுகாவலர் புனித சவேரியார் திருவிழா நவம்பர் 28முதல் டிசம்பர் 7 வரை 10 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 5 ம் தேதி பங்குதந்தை பேரருட்தந்தை ஜோஷி அடிகளார் தலைமையில் மாதர் ஜோதிஸ் மறைவட்ட இயக்குநர் தந்தை அருட்தந்தை பிரின்ஸ் மற்றும் மறைவட்ட தலைவர் திருமதி ஷைலா ஆகியோர் எம் மாதர் ஜோதிஸ் இயக்கத்தை பார்வையிட்டனர். டிசம்பர் 9 முதல் டிசம்பர் 15 வரை கிறிஸ்துமஸ் கரோல் சிறப்பாக நடத்தப்பட்டது. கிறிஸ்து பிறப்பு திருநாள் திருப்பலி டிசம்பர் 24அன்று நள்ளிரவு 11.30 மணிக்கு தொடங்கி சிறப்பாக நடை பெற்றது.

### புனித அன்னை தெரசா ஆலயம் கல்லுவிளை

கிறிஸ்துமஸ் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும் அன்றைய தினம் கல்லுவிளை பகுதியைச் சார்ந்த 15- ஏழைக் குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசு மற்றும் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

டிசம்பர் மாத முதல் வெள்ளி ஆராதனை நடைபெற்றது. 18 ம் தேதி ஒருநாள் வகுப்பு மற்றும் பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது. 21,22,23 ஆகிய நாட்களில் வீடுகளில் கிறிஸ்து பிறப்பு செய்தி அறிவித்தல் நிகழ்வு நடைபெற்றது. 24 ம் தேதி கிறிஸ்மஸ் திருப்பலி நடைபெற்றது.

### புனித மிக்கேல் அதிதூதர்ஆலயம் வெள்ளாம்பி



டிசம்பர் 20ம் தேதி வீடுகளில் கிறிஸ்து பிறப்பு அறிவித்தல் நிகழ்வு நடைபெற்றது. 24 ம் தேதி கிறிஸ்மஸ் திருப்பலி கொண்டாடப்பட்டது 26 ம் தேதி கிறிஸ்மஸ் குடில்களை பார்க்க பங்குமக்கள் சென்றனர். புது வருட திருப்பலி 31 நள்ளிரவு நடைபெற்றது.

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

மறைமாவட்ட நற்செய்தி பெருவிழாவில் பங்குமக்கள் அதிகமாக கலந்து கொண்டனர். 9 ம் தேதி முதல் 16 ம் தேதி வரை ஆலயத்தில் இருந்து தொடங்கி பங்குதந்தை தலைமையில் வீடுகளில் கிறிஸ்து பிறப்பு செய்தி அறிவித்தல் நிகழ்வு நடைபெற்றது. இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி, ஆராதனை மற்றும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை இளைஞர்கள் சார்பில் பசித்தோர்க்கு உணவு அளித்தல் நிகழ்வு நடைபெற்றது. 14 ம் தேதி பெயர் கொண்ட திருநாள் கொண்டாடிய அருட்சகோதரர் டோனிக்கு பங்கு மற்றும் மறைக்கல்வி சார்பில் வாழ்த்துக்கள் தெரிவித்து கேக் வெட்டப்பட்டது. மூன்றாவது வெள்ளிக்கிழமை மிஷன் தளங்களுக்கான பரிந்துரை ஜெபம் பங்குதந்தை தலைமையில் நடைபெற்றது. கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு உறவியங்கள் பக்தசபைகள் பங்குபேரவை ஆகியோர் சார்பில் பங்குதந்தையுடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடினர். 21 ம் தேதி கிறிஸ்மஸ் விழா மற்றும் கிறிஸ்து பிறப்பு யூபிலி நிறைவு விழா மற்றும் கிறிஸ்மஸ் பரிசு குலுக்கல் கொண்டாடப்பட்டது. 7 உறவியங்களுக்கும் இடையேயான பஜனை பாடல் போட்டி நடைபெற்றது. 26 ம் தேதி முதல் சாவறா நவநாள் தொடங்கியது. 28 ம் தேதி ஆல்பட் தந்தை தயாரின் இறுதிச்சடங்கில் பங்குமக்கள் கலந்து கொண்டனர். 31 ம் தேதி வருட இறுதி ஜெபம் மற்றும் புதுவருட திருப்பலி நடைபெற்றது. ஒவ்வொரு வாரம் பிறந்தநாள் திருமணநாள் கொண்டாடுபவர்களுக்காக ஆலயத்தில் பங்குதந்தை ஜெபித்து ஆசிர்வழங்கி பரிசுகள் வழங்கப்படுகிறது.




### காட்டாத்துறை புனித மிக்கேல் ஆலயம்

காட்டாத்துறை புனித மிக்கேல் ஆலய மிஷன் லீக் மாணவர்களில் நற்செய்திப் பணி ஆர்வத்தை தூண்டும் வகையில் மிஷன் லீக் மாணவர்களுடன் இணைந்து பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், திருத்தொண்டு பணிக்குழு மற்றும் பங்கு மக்கள் சேர்ந்து 18 ம் தேதி மாலை விருதுநகர் திருத்தொண்டு தளம் சந்தித்தனர். அங்குள்ள வீடுகளுக்கு சென்று கிறிஸ்து வாழ்த்து பாடல்கள் இசைத்து அத்தோடு ஊர் மக்களை ஒன்றாக வரச்செய்து கிறிஸ்துமஸ் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஜெபனீஷ் அவர்கள் உடனிருந்து வழிநடத்தினார். டிசம்பர் 28 புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் திருக்குடும்ப

திருவிழா, கிறிஸ்து யூபிலி நிறைவு விழா மற்றும் மாசில்லா குழந்தைகள் தினம் என முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி முப்பெரும் விழாவின் சிறப்பு மறையுரையை வழங்கினார். திருப்பலி முடிந்தவுடன் யூபிலி பவனி, யூபிலி செபம், யூபிலி கீதம், குழந்தைகளுக்கு ஆசி வழங்குதல், குழந்தைகளின் செய்கை பாடல், சிறப்பு கருத்துரை என அனைத்தும் சிறப்பாக நடைப்பெற்றது.

## மஞ்சாலுமூடு

### திருச்சிலுவை தேவாலயம் மாலைக்கோடு

கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியான கிறிஸ்து பிறப்பு செய்தியை அறிவிக்கும் கரோள் டிசம்பர் 08 முதல் 16 வரை நடைபெற்றது. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு 20 ஆம் தேதி இரண்டாம் உறவியம் குழிஞ்ஞுவிளை பகுதியில் மக்களை சந்தித்தல், ஒரு மணி நேர தியானம் மற்றும் பாவசங்கீர்த்தனம் போன்றவை நடைபெற்றது. 21 ஆம் தேதி கிறிஸ்துமஸ் சிறப்பு ஏலம் நடத்தப்பட்டது. லேும் கிறிஸ்துமஸ் திருப்பலியை தொடர்ந்து இளைஞர் இயக்கம் சார்பில் குலுக்கல் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. 27 ஆம் தேதி மறைவட்ட அளவில் நடந்த போட்டிகளில் மறைக்கல்வி மாணவர்கள் மறைவட்ட அளவில் இரண்டாம் இடம் பெற்றனர். எதிர்நோக்கு ஏமாற்றம் தராது என்ற பிரான்சிஸ் அவர்களின் அழைப்புடன் தொடங்கிய 2025 ஜூபிலி ஆண்டு ஞாயிற்றுக்கிழமை 28 ஆம் தேதி நிறைவு ஜெபம் மற்றும் சிறப்பு திருப்பலியுடன் நிறைவு பெற்றது.



### திருக்குடும்ப ஆலயம் முக்கூட்டுக்கல்

கிறிஸ்துமஸ் பஜனை உறவியங்களின் தலைமையில் நடைபெற்றது. கிறிஸ்மஸ் ஏலம் 21 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் நடைபெற்றது.

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் மஞ்சாலுமூடு

கிறிஸ்த்து பிறப்பை முன்னிட்டு கிறிஸ்துமஸ் பஜனை 16 நாட்கள் 841 வீடுகளில் பாடப்பட்டது. கல்லுவிளையில் நடைபெற்ற மறைமாவட்ட கண்வென்சனில் 68 உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதி நாளில் நடைபெற்ற விழாவில் மிஷன் ஞாயிறு அதிக காணிக்கை

கொடுத்ததற்காக நமது ஆலயத்திற்கு Trophy கிடைக்கப்பெற்றது. இளைஞர் இயக்கம் சார்பில் நடைபெற்ற கலை போட்டியில் சிறந்த குறும் படத்திற்கான முதல் பரிசும் மேலும் சிறந்த இயக்குனருக்கான பரிசும் கிடைக்கப்பெற்றது. KKSS சார்பாக நடைபெற்ற மறைமாவட்ட போட்டியில் பாடலுக்கான முதல் பரிசும் குழு நடனத்திற்கான இரண்டாம் பரிசும் நமது மகளிர் சகோதரிகள் பெற்றனர். மேலும் மறைக்கல்வி மறைவட்ட கலை போட்டியில் நமது



மறைக்கல்வி நிலையம் 216 புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்றது. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு திருப்பலிக்கு வர முடியாத 15 நோயாளிகளுக்கு வீடுகளில் சென்று நற்கருணை வழங்கப்பட்டது. கிறிஸ்துமஸ் இரவு திருப்பலிக்கு பின் கலை நிகழ்ச்சிகள் கொண்டாடப்பட்டது. வீடுகளில் கிறிஸ்துமஸ் குடில் போட்டிகள் நடத்தப்பட்டது. புத்தாண்டு நிகழ்வுகளாக இரவு 11-30 மணிக்கு ஆராதனை தொடர்ந்து திருப்பலி முடிவில் கேக் காபி அருந்தி கொண்டாடப்பட்டது. வின்செந்தியர் இயக்கம் சார்பாக 11 வீடுகளில் உணவு பொருட்கள் கேக் 500 ரூபாய் கிறிஸ்துமஸ் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## தூசைபுரம்

### ▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

டிசம்பர் 03, அருட்தந்தை, அருட்சகோதரிகள், திருப்பணியாளர்கள் மற்றும் பாடற்குழு இணைந்து மொத்தம் 20 பேர் பொன்முடி சுற்றுலா சென்றனர். 21 ஆம் தேதி திருப்பலி முடிந்தவுடன் புதுப்பித்த பங்குத்தந்தையின் அடுப்பறை அருட்தந்தை அவர்களால் மந்திரிக்கப்பட்டன. 22 ஆம் தேதி படுக்கை நோயாளிகளுக்கு பாவ சங்கத்தினமும் நற்கருணையும் வழங்கப்பட்டது. 24 ஆம் தேதி இன்று கிறிஸ்து பிறப்பு திருப்பலி முடிந்தவுடன் இளையோர்கள், குழந்தை ஈசோ இயக்க பிள்ளைகள் சார்பாக நடனம் நடைபெற்றன. இளையோர்கள் சார்பாக மரவிழா நடைபெற்றன. 27 ஆம் தேதி இளையோர்கள் சார்பாக சுற்றுலா சென்றனர். 28 ஆம் தேதி பங்களாவில் ஜூபிலி நிறைவு விழா கொண்டாடப்பட்டது. தொடர்ந்து திருமுழுக்கு வழங்கப்பட்டது.



### தூய தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

8 ஆம் தேதி மாதாவின் அமலோற்பவ திருநாளின் சிறப்பு திருப்பலியில் அருள் சகோதரிகள் துறவறத்தின் வார்த்தைப்பாட்டை புதுப்பித்தனர் இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டன. 18 ஆம் தேதி கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு மாலை 6.00 மணிக்கு திருப்பலி, நற்கருணை ஆராதனை மற்றும் பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது. 22 ஆம் தேதி படுக்கை நோயாளிகளுக்கு பாவ சங்கத்தினமும் நற்கருணையும் வழங்கப்பட்டது. 23 ஆம் தேதி மரியாவின் சேனை சார்பாக நோயாளிகளை சந்தித்து சிறு உதவி செய்து, கிறிஸ்து பிறப்பு விழாவை இறுதியில் முஞ்சிறை முதியோர் இல்லம் சென்றனர்.

### புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

டிசம்பர் 02, முதல் பஜனை பாடப்பட்டது. 25 ஆம் தேதி திருப்பலி முடிந்தவுடன் மறைக்கல்வி ஆசிரியர்களின் Xmas friend க்கு பரிசுகள் வழங்கப்பட்டன. 31 ஆம் தேதி இரவு 9.30 மணிமுதல் 10.30 வரை நற்கருணை ஆராதனை அதை தொடர்ந்து புது வருட திருப்பலி நடைபெற்றன. ஆராதனையில் மக்கள் தங்களின் வேண்டுதல்கள் எழுதி ஜெபித்தனர். திருப்பலியின் போது அதை மக்கள் காணிக்கையாக அருட்தந்தையிடம் கொடுத்து ஆசீர்வாதம் பெற்றனர்.

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்



பாத்திமா அன்னை ஆலயத்தில் கிறிஸ்து பிறப்புக் தினத்தை முன்னிட்டு 19 ஆம் தேதி திருப்பலி ஆராதனை மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் நடைபெற்றது. 24 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு தினம் ஆடம்பர திருப்பலியுடன் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. 31 ஆம் தேதி இரவு 11 மணிக்கு ஆராதனை மற்றும் புது வருட ஆடம்பர திருப்பலி நடைபெற்றது.

### கிறிஸ்து அரசர் ஆலயம் பாலபள்ளம்

2025 டிசம்பர் மாதத் தொடக்கத்தில் ஒன்பது நாட்கள் கிறிஸ்துமஸ் கரோல் நடைபெற்றது. குழந்தை இயேசு குழந்தைகள் புனிதர்களின் வேடம் அணிந்து டிசம்பர் 15 அன்று திருப்பலியை சிறப்பித்தனர். பங்கில் இளையோர்கள் முன்னின்று

கிறிஸ்மஸ் குடில் அமைத்தனர். வழக்கம்போல் இவ்வாண்டும் அனைத்து குடும்பங்களுக்கும் பங்கிலிருந்து கிறிஸ்மஸ் கேக் வழங்கப்பட்டது. 23 ஆம் தேதி பங்கில் ஒப்புரவு வழிபாடு நடந்தது. 21 ஆம் நாள் அனைத்து பக்த இயக்கங்கள் சார்பில் தனித்தனியாக கேக் வெட்டி கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது.



பங்குத்தந்தை அருள் தந்தை அஜின் ஜோஸ் பங்கேற்று கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார். கிறிஸ்மஸ் திருப்பலி டிசம்பர் 24 இரவு 11 மணிக்கும் புத்தாண்டு திருப்பலி டிசம்பர் 31ஆம் தேதி இரவு ஒரு மணி நேர ஆராதனையோடும் நடந்தது. மறைக்கல்வி மாணவ மாணவியர் விவிலிய கலை விழாவில் மறைவட்ட அளவில் மூன்றாவது இடம் பெற்றனர்.

### புனித சூசையப்பர் மறைவட்ட தேவாலயம், சூசைபுரம்

மறை மாவட்ட நற்செய்தி பெருவிழாவினில் பெரியவர்களும் மிஷன் லீக் மாணவர்களும் கலந்து கொண்டனர். 08 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை பங்கின் எல்லா வீடுகளிலும் கிறிஸ்து பிறப்பு முன்னறிவிப்பு பாடல்கள் பாடப்பட்டன. 14 ஆம் தேதி 'எதிர்நோக்கு ஏமாற்றம் தராது' என்னும் தலைப்பில் தக்கலை மறைமாவட்ட இளையோர்களுக்காக ' நடத்தப்பட்ட ஒரு நிமிட குறும்படப் போட்டியில், எமது இளையோர்கள் இரண்டாம் பரிசினையும் செல்வன் ஸ்டெபின் ரெக்ஸ் சிறந்த ஒளிப்பதிவாளருக்கான (Best Cinematographer Award) விருதினையும் பெற்றார்கள். 18 ஆம் தேதி மயிலாப்பூர் அற்புத திருச்சிலுவை திருநாளை முன்னிட்டு காலை 6.15 மணிக்கு திருச்சிலுவை முத்தம் செய்தல் நிகழ்வும் ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது. 22 ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு நடைபெற்ற திருப்பலிக்குப் பின்னர் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை முன்னிட்டு சிறப்பு தியானம் அருட்தந்தை மிஜோ அவர்களால் நடத்தப்பட்டது. பின்னர் ஒப்புரவு அருட்சாதனமும் அதனைத் தொடர்ந்து இரவு உணவும் அனைவருக்கும் வழங்கப்பட்டது. 24 ஆம் தேதி வின்சென்ட் தே பால் இயக்கத்தின் ஆண்கள் கிளை சபையினர் கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு 30,000 ரூபாயினை 30 ஏழைக்குடும்பங்களுக்கு

வழங்கினர். மட்டுமல்லாது 28 ஆம் தேதி நித்திர விளை கருணை இல்லத்திற்கு சென்று ரூ.15,500/- மதிப்புள்ள பொருட்களும் பணமும் வழங்கினர். 27 ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்களுக்கான மறைவட்ட அளவிலான போட்டிகள் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றன. இதில் எமது மறைக்கல்வி நிலையமானது 242 புள்ளிகளுடன் மறைவட்ட அளவில் முதலிடம் பெற்றது. 28 ஆம் தேதி திருப்பலிக்கு பின்னர் மாசற்ற குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு அனைத்து குழந்தைகளுக்காகவும் சிறப்பு ஜெபம் செய்து பங்கு தந்தை அவர்கள் இனிப்பு வழங்கினார்கள். மேலும் மறைக்கல்வி போட்டிகளில் பரிசு



பெற்ற மாணவர்களுக்கும் மங்கள வார்த்தை காலத்தில் எல்லா நாட்களிலும் ஆலயத்திற்கு வந்த மறைக்கல்வி மாணவர்களுக்கும் பங்குத்தந்தை அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள். 30 ஆம் தேதி வருட முடிவில் இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக இரவு 11 மணிக்கு சிறப்பு நற்கருணை ஆராதனையும் நள்ளிரவு 12 மணிக்கு நற்கருணை ஆசீர்வாதமும் அதனைத் தொடர்ந்து புத்தாண்டு திருப்பலியும் நடைபெற்றது.

## களியல் மறைவட்டம்

### ▶ புனித தோமையார் ஆலயம் மாறப்பாடி

டிசம்பர் மாதம் 5,6,7 தேதிகளில் நடைபெற்ற மறைமாவட்ட நற்செய்தி பெருவிழாவில் பங்குதந்தை மற்றும் இறை மக்கள் பங்கேற்றனர். மிஷன் லீக் மற்றும் குழந்தை இயேசு சிறார்கள் அனைவரும் கலந்து நற்செய்தி பெருவிழாவில் கொண்டனர். 13 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக நடைபெற்ற உணவு திருவிழா மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் ஏராளமான தாய்மார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 24 ஆம் தேதி கிறிஸ்து பிறப்பு விழாவினை முன்னிட்டு வின்சென்ட் தே பவுல் அங்கத்தினர்களால் 5 ஏழை குடும்பங்களுக்கு அரிசி, காய்கறிகள் மற்றும் சிறு பண உதவி வழங்கப்பட்டது. டிசம்பர் 9 முதல் 16 வரை கிறிஸ்துமஸ் பஜனை 7 நாட்கள் நடைபெற்றது. பஜனையின் போது ஒவ்வொரு வீட்டிலும் பங்குதந்தை அவர்கள் சிறு ஜெபம் சொல்லி அனைத்து வீடுகளையும் மந்திரித்தார். 14 ஆம் தேதி இளையோர்களுக்காக பிலாங்காலை ஆலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் மற்றும் போட்டிகள் அனைத்திலும் எமது இளையோர்கள் கலந்து கொண்டார்கள். 14 ஆம் தேதி களியல் கூரியா சார்பாக கிறிஸ்து பிறப்பு விழாவில் எம் பங்கிலிருந்து மரியாயின் சேனை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 20 ஆம் தேதி

சனிக்கிழமை கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்திற்கான ஆயத்த தியானம் மற்றும் பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது. கிறிஸ்து பிறப்பு திருப்பலி 24 அன்று இரவு 11 மணிக்கு நடைபெற்றது. இதில் குடும்பமாக பாவ சங்கீர்த்தனம் செய்து திருப்பலியில் கலந்து கொண்டு நற்கருணை பெற்றுக் கொண்ட ஒரு குடும்பத்தை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. திருப்பலிக்கு பின்னர் இளையோர்கள் தங்கள் இயக்கத்திற்கு நிதி திரட்டும் நோக்குடன் சிறப்பு குலுக்கல் நடத்தி சிறப்பித்தனர். பின்னர் மறைக்கல்வி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இறுதியாக அனைவருக்கு கேக் மற்றும் தேநீர் வழங்கப்பட்டது. 27 ஆம் தேதி பங்கு மக்கள், பங்குதந்தை மற்றும் அருட்சகோதரிகள் கிறிஸ்மஸ் காட்சிகள் காண சென்றனர். டிசம்பர் 1 முதல் 25 வரை அனைத்து நாட்களும் ஆலயத்தில் வந்த அனைவருக்கும் பங்கு தந்தை அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டது. டிசம்பர் 31 அன்று களியல் மறைவட்ட பங்குகளுக்காக நடைபெற்ற விவிலிய கலைவிழா போட்டியில் மாறப்பாடி பங்கிற்கு முதல் இடம் கிடைத்தது.

### திரு இருதய ஆலயம் பள்ளிக்கோணம்

டிசம்பர் மாதத்தில் திரு விவிலிய ஜோதி புனித அன்னை தெரேசா உறவியத்தில் பயணித்துக் கொண்டிருந்தது. டிசம்பர் 1 முதல் 24 தேதி வரை மறைக்கல்வி மாணவர்களுக்கான திறன் வளர் போட்டி கொடுக்கப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது. டிசம்பர் 1,2,3,4 ஆகிய நாள்களில் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு பஜனை பாடல்கள் நடைபெற்றது. மறைமாவட்ட நற்செய்தி பெருவிழாவில் இறைமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். KkSSS கல்லுவிளை அலுவலகத்தில் வைத்து சுகாதாரப் பணிக்குழு நடத்திய கிறிஸ்து பிறப்பு விழாவில் எங்கள் உறுப்பினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். டிசம்பர் 24 இரவு 9 மணிக்கு கிறிஸ்து பிறப்பு திருப்பலி, கிறிஸ்துமஸ் மர விழா, மற்றும் கேக் வழங்கும் விழா ஆகியவை நடைபெற்றது. திருவிவிலியம் காட்சிப் படுத்துதல் போட்டியானது இல்லங்களில் நடைபெற்றது. டிசம்பர் 28 கிறிஸ்து ஜூபிலி நிறைவு விழா, மற்றும் திருவிவிலிய ஜோதி நிறைவு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பவனியாக, ஆலயத்தில் இருந்து புறப்பட்ட திருவிவிலிய ஜோதி மீண்டும் பவனியாக ஆலயத்தில் எடுத்து வரப்பட்டது..



# படந்தாலூமூடு

### ▶ பளுகல் புனித தோமையார் ஆலயம்




2025 யூபிலி நிறைவு தின கொண்டாட்டம் 28 ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரணியை தொடர்ந்து ஆடம்பர திருப்பலி கொண்டாடப்பட்டப்பட்டது.

### ▶ புனித பவுல் ஆலயம் தெற்றியோடு

டிசம்பர் 18 முதல் 21 2025 வரை வீடு சந்திப்பு நடைபெற்றது. 24 ஆம் தேதி உறவியங்களுக்கிடையேயான கிறிஸ்மஸ் மர அலங்காரப் போட்டி நடைபெற்றது.

### ▶ மார்ட்டின் டி போரஸ் ஆலயம், கழுவன்திட்டை

கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு இறை மக்களை தயார் படுத்தும் விதமாக டிசம்பர் 1 முதல் 24 வரை மாலை 5:30 மணிக்கு திருப்பலி நடைபெற்றது. மறைமாவட்ட அளவில் நடைபெற்ற நற்செய்தி பெருவிழாவில் இறைமக்கள் கலந்து கொண்டார்கள். 8 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை பஜனை நடைபெற்றது. 21 ஆம் தேதி திருப்பலியைத் தொடர்ந்து பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது. 24 ஆம் தேதி கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி இரவு 10:30 மணிக்கு நடைபெற்றது. அதை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

### ▶ புனித மரிய கொரெற்றி ஆலயம், அதங்கோடு

டிசம்பர் 24 இரவு 10 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் மூன்று குழந்தைகள் திருமுழுக்கு பெற்றார்கள். அதன் பின் ஆயர் அவர்களால் ஆலயத்தின் முன் அமைக்கப்பட்டுள்ள குருசடி அர்ச்சிக்கப்பட்டது.

### ▶ திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

மறைமாவட்ட அளவில் நடைபெற்ற நற்செய்தி பெருவிழாவில் இறைமக்கள் கலந்து கொண்டார்கள். 10 ஆம் தேதி முதல் 18 ஆம் தேதி வரை பஜனை சிறப்பாக நடைபெற்றது. 14 ஆம் தேதி மரியாயின் சேனை புனித சகாய மாதா கியூரியாவில் பிற்பகல் 3 மணிக்கு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. இவ்ஆராதனையை பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் அவர்கள் வழிநடத்தினார்கள். அதை தொடர்ந்து கேக் வெட்டி கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. இக்கூட்டத்தை பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன்



அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். 21 ஆம் தேதி கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு தயாரிக்கும் விதமாக ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. 25 ஆம் தேதி இரவு 10 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி நடைபெற்றது. 1 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை அனைத்து நாட்களிலும் திருப்பலியில் பங்கேற்றவர்களுக்கு கிறிஸ்மஸ் அன்று பரிசுகள் வழங்கப்பட்டது. 28 ஆம் தேதி ஜூபிலி ஆண்டு நிறைவு விழா மற்றும் மாசற்ற குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. 28 ஆம் தேதி பங்குதந்தை பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களின் 20 வது குருத்துவ அருட்பொழிவு விழா கொண்டாடப்பட்டது. 30 ஆம் தேதி மறைவட்ட அளவில் நடைபெற்ற மறைக்கல்வி மாணவர்களுக்கான போட்டியில் மாணவர்கள் பங்கேற்று மறைவட்ட அளவில் இரண்டாம் பரிசு பெற்றார்கள். 31 ஆம் தேதி இரவு 9.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் அதனைத் தொடர்ந்து இரவு 10 மணிக்கு புது வருடத் திருப்பலியும் நடைபெற்றது.

## களியல் மறைவட்டம்

### காரோடு புனித சூசையப்பர் ஆலயம்

கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு டிசம்பர் மாதம் 10 ஆம் தேதி முதல் எல்லா வீடுகளிலும் பசனை நடைபெற்றது. டிசம்பர் 21 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் அருட்பணி ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் மறைக்கல்வி மாணவர்களுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் மறைக்கல்வி மாணவர்களுக்கான, கிறிஸ்துமஸ் பரிசு மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது. கிறிஸ்து பிறப்பு திருப்பலி டிசம்பர் 24 அன்று இரவு 10.30 மணியளவில் ஆரம்பமானது. திருப்பலிக்கு பின்னர் திருப்பவனிக்கு நடைபெற்றது. பின்னர் மறைக்கல்வி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. டிசம்பர் 28 ஞாயிற்றுக்கிழமை அன்று மிஷன்லீக் இயக்கம் சார்பாக ஏழைக்குடும்பங்களுக்கு உதவும் வகையில் நன்மையின் மரம் நிகழ்வினால் கிடைத்த பொருட்களைக் கொண்டு 15 ஏழைக்குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா**

# தென்காசி மறைத்தள செய்திகள்

## அமலோற்பவ அன்னை மறைத்தள ஆலய திருவிழா

மறைத்தள ஆலய திருவிழா டிசம்பர் மாதம் 5,6,7 தேதிகளை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சுமேஷ் அவர்கள் கொடியேற்றி திருவிழாவை தொடங்கி வைத்தார்.

## கிறிஸ்மஸ் கொண்டாட்டம் மற்றும் அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூடுகை



தென்காசி மறைத்தள அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூடுகை மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் மாதம் 13-ஆம் தேதி செயின்ட் ஜோசப் பள்ளிக்கூடம் பண்பொழியில் வைத்து நடத்தப்பட்டது. தக்கலை மறை மாவட்டத்தின் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோசப் முட்டத்துபாடம் அவர்கள் வருகை தந்து கூடுகையை சிறப்பித்தார். தொடர்ந்து கிறிஸ்துமஸ் நிகழ்வினை ஒட்டி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன மறைத்தள செயல்பாடுகளைப் பற்றி கலந்ததுரையாட்டப்பட்டன.

## இளையோர் இயக்கம்

இளையோர் இயக்கம் சார்பாக கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி பார்லரில் வைத்து நடத்தப்பட்டது. மறைத்தள இளையோர் இயக்க இயக்குநர் அருட்தந்தை அமன்றோ அவர்கள் தலைமையில் இளையோர்கள் இணைந்து கிறிஸ்மஸ் விழாவினை சிறப்பித்தனர்.



## MONTHLY AGENDA – JANUARY 2025

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 3 | Sat | KKSSS : Educare – Pongal Celebration<br>KII : Committee Meeting |
| 4 | Sun | VC: Vocation Promotor visit: Thuckalay–Pilankalai Forane<br>SMYM: Central Meeting<br>STI: Class<br>SVP: CC Meeting |
| 5 | Mon | FA: Doctor's Visit |
| 6 | Tue | MIG: Denha message in Tamil |
| 9 | Fri | FA : Marriage Preparation Course |
| 10 | Sat | FA: Marriage Preparation Course<br>MJ : Diocesan Leaders Meet<br>STI : Seminar for Alumni<br>SVP : Pongal Celebration at Osanam Institute<br>TM : Bible Convention Mekkarai |
| 11 | Sun | URM: Nithiravilai Forane Animators & Organizers meeting<br>STI: Eempowering faith through Adoration<br>SVP: AC Meeting |
| 12 | Mon | KKSS : SHG Pongal Celebration<br>PSSS : Pongal Celebration |
| 13 | Tue | KKSSS : Staff Pongal Celebration |
| 14 | Wed | MIG : Fancy Dress Challenge |
| 15 | Thu | CAT : Bible Fest : Diocesan Level Cultural Competition |
| 16 | Fri | MS : Visit at Arukani |
| 17 | Sat | ASc: Science Exhibition |
| 18 | Sun | SMYM: Central Meeting<br>STI: Class |

| | | |
|---|---|---|
| 19 | Mon | HC:Anti – Tobacco day Awareness programme<br>FA : Doctor's Visit |
| 24 | Sat | SINAI : One day Retreat<br>KII : Submission of KII Christmas cover<br>SMYM : Leadership & Media Camp<br>EIRD : Bishop's Meeting<br>PSSS: Awareness class 'Kalvi Kappom' |
| 25 | Sun | URM: Parish Visit<br>CAT: BTCT<br>SMYM: Leadership & Media camp |
| 26 | Mon | KKSSS: Republic day celebration for CTWWC Beneficiary Children<br>CAT: Bible Fest Forane level Cultural Competition & Diocesan level Bible Quiz for teachers<br>SMYM: Leadership & Media camp<br>PC: Media Training for Priests |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

# BISHOP'S ENGAGEMENTS - JANUARY 2026

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Thu | 03.00 am<br>05.00 pm | Palugal : Marriage Holy Qurbana<br>Trivandrum : House Blessing |
| 2 | Fri | 10.00 am<br>05.00 pm | Padanthalummoodu : Marriage Holy Qurbana Curia meeting |
| 3 | Sat | 03.30 pm | Bishop's House: Cathedral Sub-committee meeting |
| 4 | Sun | 09.30 am<br>03.00 pm | Trivandrum : Nazrani Sangamam at Lourdes<br>Bishop's Hose: Cathedral core committee meeting |
| 5 | Mon | 10.00 am | Sangamam : Health Commission Secretary's Meeting |
| 6-11 | Tue -Sun | | Kakkanad : Syro Malabar Bishop's Synod |
| 12 | Mon | 09.30 am | Curia Meeting |
| 13 | Tue | 11.00 am | Nattalam : Syro-Malabar Holy Qurbana |
| 14 | Wed | 10.00 am | Changanacherry : Pavanashramam Jubilee Holy Qurbana |
| 15 | Thu | 10.00 am<br>06.00 pm | Bishop's House: Prayer and meeting with Vocation directors<br>Mukkoottukal : Feast Day Holy Qurbana |
| 16 | Fri | 10.00 am | Kalluvilai : NIDHI GB meeting |
| 17 | Sat | 04.00 pm | Thrissur : Engagement |
| 18 | Sun | 08.30 am<br>04.00 pm | Kuttaicode : Feast day Qurbana<br>Vanchinagar : Re- Consecration of Altar |

| | | | |
|---|---|---|---|
| 19 | Mon | 09.30 am<br>02.30 pm | Nagercoil : UCC Symbosium on Nicean Creed<br>Anayadi : School Blessing |
| 20 | Tue | 09.30 am | Sangamam : Priest's Conference >> Chennai |
| 21-22 | Wed-Thu | | TNBC Bishop's Conference |
| 23 | Fri | 09.30 am | Bishop's House: Curia meeting |
| 24 | Sat | 10.00 am | Palai: Benefactor's Visit |
| 25 | Sun | 08.30 am<br>05.00 pm | Varuthattu : First Holy Communion Qurbana<br>Vellambi : Holy Qurbana |
| 26 | Mon | 06.30 am | Thuckalay: CMC Holy Qurbana |
| 27 | Tue | 07.00 am | Sangamam: Holy Qurbana for Pilgrims |
| 28 | Wed | 05.00 pm | Mukkoottukal: Minor Seminary visit |
| 29 | Thu | 05.30 pm | Thenkasi, Pudur : School Day |
| 30 | Fri | 10.00 am | Bishop's House: Meeting with Kanyakumari Bishops |
| 31 | Sat | 09.30 am<br>01.00 pm | Sangamam : Seminar for Catechism |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**